**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 117/2015 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 5 |
| | Defence |
| | Court |
| Name | பாலசுப்பிரமணி |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

Signature of Interpreter

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது சென்னை மாநகர காவலில் திரு.வி.க. நகர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 23.01.2015 அன்று நான் ஓரகடம் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது திரு.கோபால் அவர்கள் கொடுத்த புகார் மனுவைப் பெற்று ஓரகடம் காவல் நிலைய உதவு ஆய்வாளர் திரு. ராஜேந்தர் என்பவர் ஓரகடம் காவல் நிலைய குற்ற எண். 22/2015 பிரிவு 394, 307இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்திருந்ததை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 23.01.2015 அன்று 18.30 மணியளவில் சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகும். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும். சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்து கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் கோபால், ராஜ்குமார் மற்றும் பழனிசாமி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் கண்ணன் மற்றும் சரவணன் (எ) சிவா ஆகியோர்களை பற்றி விசாரித்து தக்க புலன் வைத்திருந்தேன். இதற்கிடையில் ஓரகடம் காவல் நிலைய குற்ற எண். 28/2015 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான கண்ணன் மற்றும் சரவணன் (எ) சிவா ஆகியோர்களை 2015 பிப்ரவரி மாதம் 6ம் தேதி காலை 9.10 மணியளவில் திருவேணி அகடெமி மெயின் கேட் அருகில் வைத்து ஆஜர் சாட்சிகளான கமல், கிராம நிர்வாக அலுவலர் ஓரகடம் மற்றும் நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலையில் எதிரியை கைது செய்து எவ்வித அச்சுறுத்துதலும் துன்புறுத்துதலும் இன்றி அவர்

தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 23.01.2015 அன்று மாலை தானும் சரவணனும் ரூபாய் 21,000/– பணத்தையும் வாட்சையும் கோபாலை தாக்கி மிரட்டி பிடிங்கி சென்றதை ஒப்புக் கொண்டார். மேலும் பணத்தை செலவு செய்தாதாக வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டார். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு எதிரியான சரவணன் (எ) சிவாவையும் 06.02.2015 அன்று காலை 9.10 மணியளவில் திருவேணி அக்டெமி மெயின் கேட் அருகில் வைத்து ஆஜர் சாட்சிகளான கமல், கிராம நிர்வாக அலுவலர் ஒரகடம் மற்றும் நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலையில் 2வது எதிரியை கைது செய்து எவ்வித அச்சுறுத்துதலும் துன்புறுத்துதலும் இன்றி அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அநத் ஒப்புதல் வாக்குமூலத்தில் 23.01.2015 அன்று மாலை தானும் கண்ணனும் ரூபாய் 21,000/– பணத்தையும் வாட்சையும் கோபாலை தாக்கி மிரட்டி பிடிங்கி சென்றதை ஒப்புக் கொண்டார். மேலும் பணத்தை செலவு செய்தாதாக வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டார். மேலும் கோபலின் டைடன் வாட்சையும் அவரிடம் இருந்தது மற்றும் 20 செ.மீ. நீளம் உள்ள ரம்பம் போன்ற கத்தி ஒன்றையும், 9 செ.மீ. பிளாஸ்டிக் பிடி போட்டது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எடுத்து ஆஜர் செய்ததை மேற்கண்ட மகஜர் சாட்சிகள் முன்னிலையில் 14.45 மணிக்கு திருவேணி அகடெமி மெயின் கேட் அருகில் மகஜரில் கைப்பற்றினேன். பின்பு விசாரணை முடித்து வழக்கு சொத்துகளுடன் நீதிமன்ற காவலுக்கு மேற்கண்ட கொலை வழக்குடன் சேர்த்து இவ்வழக்கையும் சேர்த்து அனுப்பினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகும். அதன் பிறகு இவ்வழக்கை 394, 307 இதசவில்

இருந்து 394, 341, 307 இதசவின் பிரிவு மாற்றும் செய்து பிரிவு மாற்று அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.10 ஆகும். அதன்பிறகு என்னுடைய விசாரணையை முடித்து எதிரிகள் மீது 394, 341, 307 இதசவின் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

(எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்